IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,ARAKKONAM, RANIPET DISTRICT.

**PAGE NO.01/2019**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII of Criminal Procedure)

| | | | | |
|---|---|---|---|---|
| Calender | : | CC.65/2017 | | |
| Miscellaneous | : | | | |
| Preliminary Register | : | | | |
| Sessions | : | | | |
| Deposition of witness for | : | Prosecution | : | PW-1 |
| | | Defence | : | |
| | | Court | : | |
| Name | : | மணி | | |
| Father's Name | : | ஆறுமுகம் | | |
| Village | : | விண்டர்பேட் | | |
| Taluk | : | அரக்கோணம் | | |
| Caste | : | - | | |
| Calling | : | அலுவலக உதவியாளர் சென்ரல் ஸ்கூல் | | |
| Religion | : | கிருஸ்டியன் | | |
| Age | : | 60 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.03.2020

நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரியை எனக்கு தெரியாது. சாட்சி கென்னடி எங்கள் பள்ளியின் தலைமை ஆசிரியர். கென்னடி எந்த தேதியில் எதற்காக போலிசில் புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (ஒப்புதல் வாக்குமூலலத்தின் நகல் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்) உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது இல்லை.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத போரி அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டு கு.வி.

எனது சொந்த வேலையாக அரக்கோணம் மோசூர் செல்லும் ரோட்டில் உள்ள அம்பேத்கர்நகர் சுடுகாடு செல்லும்போம் போலிசார் ஒரு நபரை விசாரணை செய்துக்கொண்டு இருந்தனர் என்றும் நான் என்ன என்று பார்த்தபோது நாகராஜ் வயது 27 த/பெ.கணேசன், மஸ்தான் பாவா தெரு அம்பேத்கர்நகர் அரக்கோணம்

என்றும் அந்த நபர் அவரது முகவரியை கூறினார் மேலும் போலிசார் அந்த நபரை விசாரணை செய்தபோது அந்த நபர் 17.04.2015 அரக்கோணம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள மதுபான கடையில் இரவு பூட்டை உடைத்து 18 மது பாட்டில்கல் திருடியதாகவும் அதன் மதிப்பு ரூபாய் 850 அந்த பணத்தை செலவு செய்துவிட்டதாகவும் சொன்னார் என்றும், அதே நபர் மீண்டும் 05.05.2016 இரவு சி.எஸ்.ஐ.சென்ரல் மேல்நிலைப்பள்ளியில் உள்ள கணினி அறையின் பீட்டை உடைத்து அதில் இருந்த கம்யூட்டர் உதிரிபாகங்களான கம்ப்பூட்டர் கி போர்டு, மானிடர், சிபியூ, மவுஸ், பெடஸடல் பேன், ஆகியவையும் திருடி சென்னை மோர் மார்க்கெட்டில் விற்றுவினட்டதாக சொன்னார் என்றும் அதன் மதிப்பு ரூபாய் 15 ஆயிரம் என்றும் சொன்னார் என்றும் அதில் 5 ஆயிரம் செலவு செய்துவிட்டதாகவும் சொன்னார் என்றும், சோளிங்கர் சென்று அங்கு கோவில் உண்டியை உடைத்ததாக சொன்னார் என்றும், செலவு செய்த பணம் போக மீதம் 10 ஆயிரம் (500 ரூபாய் 20 தாள்கள்) எதிரியின் பையில் இருந்து எங்கள் முன்பு போலிசார் கைப்பற்றினார்கள் என்றும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்றுவதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.